1000 ரூபாய் இனம்.

உ

ஸ்ரீசத்குரு கதிரேச்வராய நம:

APR 1932

# மதாராய்ச்சிக்குறிப்புகள்

தொகுத்தோனும் வெளியிடுவோனும்,

எம். கே. கேசவனுண்ணி நாயர் என்னும்

ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதி

பொருளுதவியாளர்,

சென்னை சட்டசபை அங்கத்தினர்

ஸ்ரீமான்

W. P. A. சௌந்திரபாண்டியன் M.L.C. அவர்கள்

1932ஆ ஏப்ரல்மீ 12உ

[விலை 2 அணா

Q2.
M32
183822

ராஜா பிரஸ், மதுரை—32.

485
294.5



ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதி.

# மதாராய்ச்சி குறிப்புகள்.

183822

சர்வமத சகோதரர்களே!

நான் கீழ்க்காணும் கேள்விகளைச் சென்ற சுமார் 8 வருடங்களுக்குமுன் சென்னை சித்த ஸ்ரீ யோகானந்த சுவாமிமடம் விலாசத்தைக்கொடுத்து வெளியிடப் பெற்றபொழுது கேள்விகளுக்குத் தக்க விடை யிறுக்கும் பண்டிதர்களுக்குத் தகுந்த இனம் அளிப்பதாகக் கூறினேன். தென்னாட்டில் உள்ள கல்விப் பெரியார்கள் இவ்விஷயத்திற்கு முன் வராத காரணத்தால் நானே எனக்குத் தெரிந்த தமிழ்ப் பாஷையில் கேள்விகட்கு விடையாக சில நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன். அவையாவன:—(1) மலையாள மொழியில் அப்ராஹ்மண உத்போதனம் என்னும் நூலும் தமிழில் (2) மநுநீதி மர்மம் (3) ஞானசூரியன் (4) மதவிசாரணை என்னும் நான்கு நூல்களுமே ஆகும். இந்த நூல்களின் முக்கிய கருத்து என்னவெனில் பிராமணரல்லாத மக்கட்கு ஐம்பெரும் முன்னேற்றத்தைக் குறித்த ஆராய்ச்சியேயாம். அவை. (1) ஈஸ்வர ஆராதனை (2) சமூகம் (3) வித்தை (4) நல்லொழுக்கம் (5) அரசியல் அம்மேற்சொல்லிய ஐம்பெரு முன்னேற்றங்கள் பிராமணரல்லாதாரைப் பொறுத்தமட்டிலும் வைதீக மதங்களைச் சார்ந்த (ஜைன, புத்தமதங்களினின்றும் வேறுபட்ட) புதிய சைவம், வைணவம் முதலிய மதங்களாலும் அதிகார முறைப்படி கிடைக்காவென்றும் ஒரு சிறிது இக்காலத்தில் கிடைத்தனபோற் றோன்றுவன ஆங்கில ஆட்சியின் கதிர் ஒளியின் கருணையே யன்றி வேறல்லவென்பது தெற்றெனவிளங்காநிற்கும். வைதீக மதத்தில் கொலை, களவு, கள்ளுண்ணல், வியபிசாரம், பொய், இவைகள் ஐந்தும் வேதத்திலும் வேதத்தைச் சார்ந்த பிராஹ்மண நூல்களிலும் புனித கருமங்கள் என்று விளக்குவதைக் காட்டவும், அது சாக்கிய முனி புத்த பகவானுக்கு பிற்பாடு பஞ்சமகாபாதகங்களாக மாறிற்று என்பதை மக்களுக்கு விளக்கவும். ஐம்பெரும் முன்னேற்றங்கள் பிராமணரல்லாதாருக்கு வைதீக முறைப்படி அதிகார முறையில் கிடைக்காவென்பதையும் மேலும் இந்நூற்களில் ஏவல், பில்லி, சூனியம் முத

விய மாரணம், உச்சாடனம், ஸ்தம்பனம் ஏவல் பிரயோகங்களும் நிறைந்திருக்கின்றவென்பதை விளக்கிக்காட்டவும் இந்நான்கு நூலும் எம்மால் வெளியிடப்பட்டது. இதனால் வைதீக மதத்தை நாசம்பண்ண வேண்டுமென்பது என் கொள்கையல்ல. மேற்படி விஷயங்கள் பிராமணரல்லாதாருக்கு முன்னேற்றத் தடைகளும், பஞ்சமகா பாதகங்களும், ஏவல் பில்லி சூனியம் முதலிய மாரண உச்சாடன ஸதம்பன பிரயோகங்களும் வேதஸ்மிருதி முதலிய வைதீகப் பிராமண நூல்களிற் சொல்லவில்லையென்றும் முன்னுக்குப் பின் முரணில்லாமலும் புது அர்த்தத்தைக் கொடாமலும் அறிவுடையார் பலருக்கும் ஒப்பக்கூடியதாயும் எவராகிலும் கற்றுத்தெளிந்த அறிஞர் மேற்படி வேதஸ்மிருதி ஆகமம் முக்கிய வைதீகமுறைப்படி பிராமண நூல்களிலிருந்து பிரமாணங்களைக் கொடுத்து தமிழில் வெளிவந்துள்ள மூன்று நூல்களுக்கும் நடுநிலை திரும்பாது தமிழில் கண்டனம் எழுதவல்லார்க்கு ரூபாய் 1000 (ஆயிரம்) அத்யாத்மதர்மப் பிரசாரகராகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களால் கொடுக்கப்படும்.

அக்கண்டன நூலும் ஒருவருஷ காலத்துக்குள் வெளிவரவேண்டும்.

1933ம் ௵ மார்ச்சுமீ ௴க்குமேல் காலம் செல்லக்கூடாது,

இப்படிக்கு,

சிவானந்த ஸரஸ்வதி.

உ

ஸ்ரீ சற்குருவே நமக.

## பொது மானவ தர்ம நியமங்கள்.

(1) a. தன் பொருளை மற்றொருவன் திருடாதிருக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டவன் அவன் மற்றொருவன் பொருளைத் திருடலாகாது.

b. அவன் மற்றொருவன் பொருளைத் திருடுவானாகில் தன் பொருளை மற்றொருவன் திருடும் காலையில் துக்கியாதிருக்கவேண்டும்.

(2) a. தன் மனைவியை மற்றொருவன் கைப் பற்றலாகாதென்ற எண்ணங்கொண்டவன் அவன் மற்றொருவன் மனைவியைக் கைப்பற்றலாகாது.

b. அவன் மற்றொருவன் மனைவியைக் கைப்பற்றுவானாகில் தன் மனைவியை மற்றொருவன் கைப்பற்றுங்காலையில் துக்கியாதிருக்கவேண்டும்.

(3) a. தன்னை மற்றொருவன் கிழடாக்காதிருக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டவன் அவன் மற்றொருவனைக் கிழடாக்கலாகாது.

b. அவன் மற்றொருவனை கிழடாக்குவானாகில் தன்னை மற்றொருவன் கிழடாக்குங்காலையில் துக்கியாதிருக்க வேண்டும்.

ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி.

சிவமயம்.

## மதசமாலோசனைக் கேள்விகள்.

I. (a) இந்துமதம் என்ற பெயரால் வழங்கிவருகின்றமதத்திற்கு அதன் முக்கிய தருமசாஸ்திரமுறைப்படி இதுவே பொருத்தமான பெயராகுமா?

(b) அல்லது என்னபெயர்கொண்டு அழைக்கலாம்?

(c) இந்த மதத்திற்கு முதநூல்கள் யாவை?

(d) எக்காலத்தில், எப்பாஷையில் யாரால் எழுதப்பெற்றன?

## விடைகள்.

I. (a) இது பொருத்தமான பெயரல்ல.

(b) வைதீகமதம் அல்லது ஸ்ரௌத ஸ்மார்த்த தர்மம்.

(c) வேதங்கள்:-இருக்கு, எஜுர், சாமம், மநு முதலியஸ்மிருதிகள்.

(d) ஐயாயிரம் வருடங்களுக்குள் ஆயிரம் வருடங்களுக்குமுன் சில ஆரியப்பிராமணர்களாலும், ஆரிய மதந்தழுவி அப்பிராயமணர்களாகிய திராவிடர்களாலும் சமஸ்கிருத பாஷையில் எழுதப்பெற்றன.

II. (a) வேளாளர், நாயர், நாடார், சீக்கிய ஆகாலியர் காயஸ்தர் முதலிய பெயர்கள் வழங்கிவருகின்ற குலத்தவர்கள் இப்போது அநுஷ்டித்துவரும் வைதீக மதாநுசாரம் அல்லது வருணாஸ்ரம முறைகொண்டு எந்த வகுப்பினர் என்று அழைக்கவேண்டும்?

(b) அந்த வகுப்பினர் நூன்முறைப்படி எவ்வகையால் முன்னேற்றம் அடைய அவர்கள் அதிகாரம் உடையவர்கள்?

c) அந்த முன்னேற்றமும் முக்கியமாய் எத்தனை வகைப்படும்?

## விடைகள்.

II. (a) சூத்திரர்.

(b) சூத்திரர்களுக்கு எந்தவகையிலும் அதிகாரமில்லை.

(c) ஐம்பெருமுன்னேற்றங்கள்:—(1) அத்யாத்மம் அல்லது ஈஸ்வரவழிபாட்டில். (2) சமுதாயத்தில். (3) கல்வியில். (4) நல்லொழுக்கத்தில். (5) அரசியல்.

## கேள்விகள்.

III. (a) இந்தியாவில் வேதஸ்மிருதி ஆகமங்களை ஒத்துக்கொள்ளுகின்ற, சைவம், வைணவம், ஸமார்த்தம், மாத்துவம் ஆகிய மதங்களும் வேதப்புறம்பாகிய சமண, புத்த மதங்களும் ஆகிய இவற்றுள் பழமையானது எது?

(b) முன்தோன்றிய மதத்திற்குப்பின்பு தோன்றிய மதத்தின் உற்பத்திகாலத்திற்கு முன்புள்ள நிலை எவ்வாறு இருந்தது?

(c) அந்த மதத்திற்குள்ளநூல்கள், அவற்றின்பாஷை, காலம், ஆசிரியர்வகைகள் யாவை?

## விடைகள்.

III. (a) வேதம் அல்லது வைதிகமதம்.

(b) மதவிசாரணை, ஞானசூரியன், மநுநீதிமர்மம் முதலிய நூல்களிற்கண்டுகொள்க.

(c) முதற்கேள்விக்குள்ள சமாதானமே இதற்கும்.

## கேள்விகள்.

II. (a) வேதப்புறம்பினராகிய சமணபுத்தமதத்தினர்கள் தங்கள் மதந்தோன்றிய காலந்தொட்டு இற்றைக்காலம்வரைக்கும் வைதிகஸ்மார்த்த தாந்த்ரீகமதக்குழுவினருக்கு அவரவர்களின் மத உரிமைப்படிக்கு யாது யாது தீங்கு சூழ்ந்தன?

(b) அவர்களுக்கு (சமண புத்தமதத்தினருக்கு) கருச்சிதைவு, தலைவெட்டல், கழுவேற்றல் முதலிய கேடுகளைச் சைவர்கள் செய்துள்ளார் எனச்சைவநூல்கள் கூறுமுகத்தான் அறியக்கிடக்கின்றது. அவ்விதத்தண்டனைசெய்தது சரியென்று ஒத்துக்கொள்வதற்குத்தக்க ஆதாரங்கள் எவை?

## IV. விடைகள்.

(a) வேதத்தில் கூறிய வைதீகத்தொழில்களாகிய யாகங்களைப் பஞ்சமகா புனித கர்மங்களாகிய கொலை முதலிய கர்மங்களைச் சமன புத்தர்கள் பஞ்ச மகா பாதகங்கள் என்று கூறியது குற்றம் போலும். உதாரணம், திருஞான சம்பந்தர் தாம் பாடிய ஆலவாய்ப் பதிகத்தில், வேத வேள்வியை நிந்தனை செய்துழல் என்னும் பாடல் பத்தையும் கற்றுத்தெளிவார்க்கே நன்கு விளங்குமாதலால் இவ்விடம் குறிப்பிடாது விடுத்தோம்.

(b) மநுஸ்மிருதி அத்யாயம் இரண்டு பாட்டு 11, 12, 13லும் தயானந்த ஸரஸ்வதி அடிகள் எழுதிய சத்யார்த்தப் பிரகாசம் மூன்றும் அதிகாரத்திலும் பார்த்துத்தெளிக. வேத நிந்தகனுக்கு கள்வனுக்குக் கொடுக்கவேண்டிய தண்டனையைக் கொடுக்கவேண்டுமாம். இவற்றின் விரிவை யாம் எழுதி வெளியிட்டுள்ள ஞான சூரியன் மூன்றும் அத்தியாயத்தில் கண்டு தெளிக.

## V. கேள்விகள்.

(a) விளையாட்டுக்காவது, கருணையினாலாவது வேறு எக்காரணங்களைக்கொண்டாவது காணுகின்ற உலகைப்படைத்தவர் கடவுள்தானா?

(b) அவர் கூறியவைதானே வேதாகமங்கள்?

c) அவருடன் ஒன்றுபடுவதுதானே முத்தி?

(d) (a) முத்தியின் இலக்கணமும் (b) சிருஷ்டி முறையும் கூறுக.

## விடைகள்.

(a) கடவுள் செய்தனவல்ல சிருஷ்டி அநாதி இது சமண, புத்த, ஸாங்க்ய வேதாந்திகளின் துணிபு.

(b) அல்ல. எவர்வேதாகமங்களைச் சொன்னார்களோ அவர்கள் கடவுளர்கள் ஆதலால் கடவுளர் பலர்.

(c) அல்ல திருக்குறள் மெய்யுணர்தல் 10ம்அத்யாயம் காமம் வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமங்கெடக்கெடும் நோய். புத்த மதரெத்தன்கூட சூத்திரமம் "இராகத்துவேஷ மோகக்ஷயாத்பரி நிர்வாணம்" மாத்யமித சூத்திரம், சூன்யவாதக் கிரந்தம்: "நிர்வாணகோலே ஒச்சேத்: ப்ரஸங்காத்ப்வஸந்ததே". நாகராஜினச்சாரியார் எழுதியது. ஆகமதத்வவிலாஸம், "மணிபூரேது நிர்வாணம், மகாகுண்டலி நிம்மக" இதே இலக்கணம் சமணரும் சொல்லியுள்ளார்.

(d) சிருஷ்டிக் கிரமத்திற்கு மதவிசாரணை 7ம் அத்தியாயத்தை நோக்குக.

(d) a. சிருஸ்டி முறைக்கு தத்வங்களின் கணக்கைச் சொல்லிய சாங்கிய தரிசனத்தைப் பார்வையிடுக.

## VI. கேள்விகள்.

(a) ஆரியாவர்த்தமென்னும் நாவலந்தீவிலுள்ள மக்கள் யாவரும் அவர்கள் மதானுசாரம் நாளுக்குநாள் முன்னேற்றமடைந்து வருகின்றார்களா? இல்லையா?

(b) அதற்குள்ள காரணங்களை உதாரணத்துடன் கூறுக.

## விடைகள்.

(a) இல்லை.

(b) இந்துமத வைதிக கர்மசங்கடத்தினாலே மக்கள் பிறமதம் புகுதலும், விக்கிரகவழிபாடும், கல்வித்தடையும் சாதிப்பிணக்குமே முக்கிய காரணங்கள். சுருங்கக்கூறின் மதமே காரணம். விபரம் வேண்டியவர்கள் ஞானசூரியன், மதவிசாரணை இவ்விரண்டு நூல்களையும் பார்வையிடுக. இந்து மக்கள் கோவில்களில் உள்ள விக்கிரக ஆராதனையில் செலவிடும் பணத்தை கல்வி வறுமை முதலிய விஷயத்திற் செலவிட்டால் இச்சக்ரவாளத்தில் ஞானக்குடை பிடித்து நடப்போர் இந்து மக்களேயாகும். பிறர் அல்லர். அறிவிழந்து தவிக்கும் பொருளுடையாரின் நிலைக்கு இரங்குவதன்றி என் சொல்வேன்.

## VII. வினாக்கள்.

a) ராஜவித்யா, அத்யாத்மவித்யா, பிரஹ்மவித்யா, வேதாந்தம் என்று பலபெயர்கள் சங்கராச்சாரியார் மதத்திற்கு வருவதற்குக் காரணம் யாது?

(b) இப்பல பெயர்களும் எவரெவர் காலங்களிலுண்டாயின.

(c) அன்றியும் சைவம், வைணவம், ஆர்யசமாஜம் முதலிய மதங்களுக்குரிய நூல்களில் திரு: சங்கராச்சாரியார் மதத்தினை ஏகான்மவாதம், மாயாவாதம் ப்ரச்சன்ன புத்தம், ஐந்தாவது நாஸ்த்திகமதம் என்று குறைகூறுவதற்குக் காரணம் யாது?

(b) அன்றியும் திருசங்கராச்சாரியார் மதத்தில் மேற்கூறியவர்களுடைய மதங்களைக் காட்டிலும் அதிகம் அல்லது குறைவு யாது கூறப்பட்டுள்ளது? அவற்றை விளக்கிக் காட்டுக.

## VII விடைகள்.

(a) க்ஷத்திரிய வம்ஸத்தாரால் ஊட்டிவளர்த்த சமணபுத்த மதத்திற்கு ராஜ வித்தை யென்றும் பெயர்.

(b) அந்த வித்தை சமண புத்தரை அடக்கித் தொலைத்த பின் திரு: சங்கராச்சாரியார் பிராஹ்மண மதத்திற்கு வேதாந்தம் என்ற பெயருடன் கொண்டுவந்தபொழுது பிரமவித்தையென்றும் வேதாந்தம் என்றும் பெயர் வரப் பெற்றது. இது இன்றைக்கு ஆயிர வருடங்களுக்கு முன்னாகும். அதே காலத்தில் பத்து உபநிடதங்களுக்கு பிரஹ்மசூத்திரமென்ற வேதாந்த சூத்திரமும், பாரத சம்ஹிதா என்னும் பகவத்கீதையும், வேதாந்திகளுடைய புராணமாகிய ஞானவாசிட்டமும் எழுதப் பெற்றது.

(c) சென்ற இரண்டாயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்னே இ ரா ஜ வி த் யா அத்யாத்மவித்யா யென்ற பெயர் புத்த பகவான், மகாவீர சுவாமிகள் காலத்தில் வழங்கிவந்த பெயர் என்பது தெளிவு. இவ்விருவருக்கும் ஆயிரத்து இருநூற்றாண்டுகளுக்குப் பின் திரு: சங்கராச்சாரியாரும் அவர் கூட்டத்தாராகிய இதர பிராமணுளும் கைக்கொண்ட காலத்தில் பிரமவித்யா வேதாந்தம் எனப் பெயர் புனையப்பெற்றது. ஏனெனில் இவர் பிராமணர்களன்றோ, அவர்களின் பெயரைசூட்டினர்.

வேதஸ்மிருதியில் கூறப்படும் யாகாதி கர்மங்களும் வருணுஸ்சிரம தர்மங்களும் இராகத் துவேஷங்களை அடிப் படையாகக் கொண்டு நடைபெறுவதால் நவீன சைவ வைணவ, ஆரியசமாஜ மதக்காரர்களின் அபாமத திருஷ்டிக்கு திரு. சங்கராச்சாரியாருடைய பரமத வேதாந்தம் சமண பவுத்த மதத்தின் கருமணி போன்று தெரிந்தது. ஆதலால் (1) ஏகாத்ம வாதி (அல்லது மாயாவாதி) (2) ப்ரச்சன்னபுத்தம் (அல்லது மறைந்த புத்தம்) ஐந்தாவது நாஸ்திகன் என்றும் பெயர் கொடுத்தனர்.

(d) அன்றியும் மோட்ச சாதனத்தைச் சம்பாதித்தவனுக்கு புனர் ஜன்மம் இல்லையென்றும் சாயுஜ்யம்முக்திப்ரகரண மும் (சாயுஜ்யம் அதாவது நிர்வாணம்) என்று சங்கராச் சாரியாலே வைதீக மதத்திலும் அதனைச்சார்ந்த உட்பிரிவு மதங்களிலும் சொல்லப்பட்டது. திரு சங்கராச்சாரியா ரால் சமண புத்தமதங்களிலின்றும் கொண்டு வந்து புகுத்தப்பட்டது. இதுவே அதிகம் அல்லது குறைவு கூறப்பட்டுள்ளது. ஆதலால் பரவித்தைக்கு அதாவது (இராஜ வித்தைக்கு) இன்னும் லோகாதீதம், குணாதீதம், காலாதீதம், அதீத வருணாஸ்ரமம் என்ற விஷயங்களும் பரவித்தை யென்னும் வேதாந்த நூலில் அடங்கியுள்ளது. இதுவே சங்கரர் மதத்திலுள்ள தாழ்வு அல்லது சிறப்பு. இவ்வாறே பிராஹ்மணர் அல்லாத வேளாண் மரபில் உதித்த அப்பிராஹ்மணராகிய விஸ்வாமித்திர முனிபுங்கவரால் இயற்றப்பட்ட காயத்திரி மந்திரத்தைப் பிராமணர் கைப் பற்றிய காலத்தில் பிராஹ்மண காயத்திரி அல்லது பிரம காயத்திரி என்பதோடு விளங்கிவருகின்றது. விரிவைஞான சூரியன், மதவிசாரணை என்னும் நூல்களை பார்த்துக் கொள்க.

## VIII. கேள்விகள்,

(a) ஒரு நாட்டில் உள்ள மக்கள் யாவரும் முன்னேற்றமடை வதற்கு மதாசாரங்கள் எவ்வாறு இருக்கவேண்டும்?

(b) இந்தியாவிற்றோன்றிய மதங்களில் எம்மதம் அவ்வாறு இருக்கின்றது?

## VIII விடைகள்.

(a) ஐம்பெரும் முன்னேற்றங்கள் ஜாதிவித்தியாசம் பாராட் டாது பொதுவா யிருக்கவேண்டும். இதில் (a) பாஷா, (b) வேஷம், (c) விசாரம் முதலியவற்றில் வித்தியாசம் அற்ற ஒற்றுமை வேண்டும்.

(b) புத்தமதம் அத்யாத்ம வித்தியா மட்டுமே நடுநிலை திறம் பாத நிலையில் உள்ளது. இராஜவித்தியா ராஜகுஹ்யம் பவித்திரமிதம் உத்தமம், என்று பகவத்கீதையில் 9 அத்தியாயம் 2-ம் சுலோகத்தில் காணப்படுகின்றது.

## IX. கேள்வி.

போனது போக இனிவரும் புதிய நாட்களிலாயினும் மக்கள் எல்லோரும் மதத்தில் சமரசமாக இராகத் துவேஷத்தை அறவே விடுத்து ஒற்றுமையுடன் முன்னேற்றமடைவதற்கு இந்தியாவிற்றோன்றிய மதங்களில் எம் மதத்தை ஒத்துக்கொள்ளலாம் என்று நான்முறையாக விளக்குக.

## IX விடை.

(சிறப்பாக புத்தமதம்) க்ஷத்ரியரால் ஸ்தாபிக்கப்பெற்ற எல்லா மதங்களும் உதாரணமாக விஸ்வாமித்திரர், கிருஷ்ணன், புத்தர், மகாவீரர் முதலியோரால் ஸ்தாபிக்கப்பட்ட மதங்கள் இவ்வளவும் பொது.

## X கேள்வி.

ஸ்ரீமத் திருவள்ளுவ நாயனர் அவர்கள் அருளிச்செய்த 1330 குறட்பாவினுல் அவர் எம்மதத்தினர் என்றும் எக்கடவுளை வழிபட்டார் என்றும் எவ்வகையான சித்தி முத்திகளையடைந்தார் என்றும் விளக்குக.

## X விடை.

ஸ்ரீமத் திருவள்ளுவர் அவர்கள் திகம்பரசமணர் ஆதிபகவான் என்னும் பெயருள்ள தீர்த்தங்கரரை இஷ்ட ஈஸ்வரனுகக்கொண்டு ஒழுகினவர். சமணமதத்தில் கூறியுள்ள சித்தி முத்திகளையடைந்தவர் இதற்குத்திருக்குறளே ஆதாரம். அதிகம் அறியவிரும்புவோர் காஞ்சி ஸ்ரீமான் அனந்தநாதநயினர் அவர்களியற்றியுள்ள திருக்குறள் ஆராய்ச்

சியும் ஜைனமத விளக்கம் என்னும் நூலை இதிற்காட்டிய விலாசத்திற்கு எழுதித்தருவித்து வாசித்துத் தெளிக. "ஸ்ரீமான் டி. ஆதிநயினார் & சன்ஸ் 27, மலையப்பெருமாள்வீதி, சென்னை" என்று எழுதவும். இதைவாசித்து முக்கியமாயறியவேண்டியது யாதெனில் திருக்குறள் சைவம், வைணவம் முதலாகிய மதத்தினர் தழுவியுள்ள மதநூலல்லாததினாலும், சமணக்கொள்கையே நூல்முழுவதிலும் நின்றநுள்ளமையாலும் இந்நூல்திகம்பர சமணருக்கே உரியது என்பது தெளிவு. திருஷ்டாந்தமாக நவீனசைவர்களுக்குரிய பன்னிரண்டு திருமுறைகளும் பதினான்குசித்தாந்த சாஸ்திரங்களுள்ளும் திருக்குறள் ஒன்றல்ல என்றமையாலும், சைவர்களின் இருபத்தாறு (26) தமிழ்நூல்களில் சிறப்பாக விபூதி, ருத்திராக்கம், சிவன், பஞ்சாக்ஷரம் இன்நான்கும் முக்கியமாய்க் கூறப்பட்டமையாலும் திருக்குறளில் விபூதி, ருத்ராக்கம் முதலியவற்றைக் கூறப்படாமையாலும் சைவருக்குரியதல்ல, திகம்பரசமணருக்கே கூறப்பட்டவையன்றி வேறைய சமயத்தோருக்குரியதன்று என்பது வெள்ளிடைமலை. திகம்பரஜெயினர் ஒழிந்து மற்றெல்லாமதத்தினரும் தங்கள் தங்கள் மதத்துக்குரியதென்று சொல்லுவதன்காரணம் தங்கள் மதத்தில் உள்ள அழுக்குகளையும், முன்னுக்குப்பின் முரண்படும் கபடவஞ்சனை பொருந்திய உரைகளையும், பாஷ்யங்களையும், மறைத்துக்கொள்ளும் பொருட்டு சபாமத்தியில் தென்னிந்தியாவில் பண்டிதர்கள் திருக்குறளை திறைச்சீலையாக்கிக்கொள்ளுகின்றனர். இதுபோன்றே வடநாட்டில் வைதிகமத இந்துகளுக்கு பகவத்கீதை முதலிய கீதைகளும், உபநிடதங்களும் வேதாந்தகொள்கையும் தங்களுடைய தீய ஒழுக்கங்களை மறைக்க உபயோகிக்கிறார்கள் என்று அறியுங்கள்.

## XI கேள்வி

இக்காலத்து தேச நன்மையின்பொருட்டு சன்னியாசிகள் என்ன ஹிதோபதேசம் செய்யவேண்டும்.

## XI விடை.

சந்நியாசிகள் முதலிய கற்றுணர்ந்த எல்லோரும் ஒன்று சேர்ந்து, அல்லது தங்களால் இயன்ற அளவு மத சம்மந்தமாய்

மக்களுக்குள் இராகத் துவேஷமில்லாத பிரேமத்தோடு சமரச வாழ்க்கைக்கும் ஒற்றுமைக்கும் காரணமாகிய ஜாதிமத பேதமில்லாமல் ஐம்பெரு முன்னேற்றங்கள் ஆண் பெண் முதலிய எல்லாவருக்கும் உரிமை அளிக்கக் கூடியதும் ஜெயினர் இந்து தேவாலயங்களும் மடாலயங்களும், வேதபாடசாலைகளும், சாலைகளும் குளங்களும், மக்கள் எல்லோருக்கும் பொது உபயோகப்படச் செய்வதும், தேவன் தேவி முதலிய பெயர்களைச்சொல்லி, எருமை ஆடு, மாடு, கோழி, முதலியவற்றை ஜீவஹிம்சை செய்யாமலும் கள்ளுண்ணாமலும் நிறுத்துவதோடு, "பொதுமக்கள் நித்தியக் கடமை" அல்லது மானவ தர்ம சிந்தாமணி என்னும் நல்லொழுக்க நூலை எல்லோரும் கற்று அதன் வழி ஒழுகச் செய்தல். இம்முயற்சியில் தங்களை யாரும் எவ்வித துன்பம் செய்யினும் அவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டியது ஒவ்வொருவரின் கடமை.

இந்நூலில் கூறப்பட்டுள்ள விஷயங்கள், மக்கள் யாவரும் சமரசமாகவும் இராக துவேஷமில்லாமலும் ஒவ்வொரு சன்மார்க்க முன்னேற்ற விஷயத்திலும், ஒற்றுமையுடன் ஒழுகவேண்டிய முறையை அநுசரித்ததாய் உள்ளது.

தற்போது "மநுநீதி மர்மம" "ஞானசூரியன்" என்னும் இரண்டு நூல்களும்; கிடைக்குமிடம் குடியரசு ஆபீஸ் ஈரோடு இந்தியா.

மதவிசாரணை என்னும் புஸ்தகம் கிடைக்குமிடம் ராஜா பிரஸ், வடக்குச் சித்திரைவீதி மதுரை, இந்தியா.

"அப்பிராமண உத்போகனம் மிதவாதிப்" பத்திரிகைக்காரியாலயம் மானேஜர், கல்லிக்கோட்டை, மலபார்.

மானவ தர்ம சிந்தாமணி பின்னர் வெளிவரும்.

இப்படிக்கு,

**சிவானந்த ஸரஸ்வதி,**

யோகானந்தாச்சிரமம், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

விஸ்வாமித்ருய நம:

## க்ஷத்திரியதர்மம் பரிபாலன சங்கம்.

1. க்ஷத்திரியர்யாவர்?
அவர்கள் யெங்கே?
அவர்கள் யெப்படி யிருக்கிறார்கள்?

ப்ராஹ்மணர்களை வழிபடாததினாலும் உபனயனம் முதலிய சடங்குகளை செய்துகொள்ளாததினாலும் க்ஷத்திரிய ஜாதிகள் வரவர சூத்திரத்தன்மையையடைந்தார்கள். அத்தி. பாட்டு.

மனுஸ்மிருதி. 10. 43.

இவர்கள் எந்த ஊரில் இருக்கிறார்கள்?

2. பௌண்டரம்; ஔண்டரம்; திராவிடம்; காம்போஜம்; யவனம்; சகம்; பாரதம்; பாலஹீகம்; சீனம்; கிராதம்; தரதம்; கசம்; யிந்த தேசங்களையாண்டவரனைவரும் மேல்சொல்லப்பட்ட க்ஷத்திரியர்களே. இவர்கள் சூத்திரராய் விட்டார்கள். அத்தி பாட்டு

மனு .10 44

அந்த க்ஷத்திரியர்களை சூத்திரதன்மைக்கு கொண்டுவந்தது.

எவ்வாறு? அத்தி பாட்டு

மனு. 8 415

3. 1. யுத்தத்தில் புறம் காட்டியோடியவன் 2. யுத்தத்தில் கைதியாக பிடிபட்டவன் 3. ப்ராஹ்மணரிடத்தில் பக்தியினால் தொண்டு செய்கிறவன் 4. விபசாரி மகன் 5. விலைக்குவாங்கப்பட்டவன். 6. ஒருவனால் கொடுக்கப்பட்டவன் 7. தலைமுறை தலைமுறையாக ஊழியம் செய்கிறவன் (இவ்வேழு முறைகளாக சூத்திர வடிவங்கொண்டு இருக்கிறார்கள்.) ஆதலால் யெல்லா ஜாதி அப்பிராஹ்மணரும் ஒரே யினத்தாராவார்கள்.

அத்யாத்மதர்ம விளம்பர விதிகளும் நியமங்களும்

## க்ஷத்திரிய தர்மம்.

1. இச்சங்கத்தில் சேரும் ஒவ்வொரு மேன்மக்களும் அன்பரும் முக்கிய முன்னேற்றங்களை அடைவதற்கு மனோ வாக்குக் காயங்களால் தான் அதை சம்பாதிப்பதும் பிறருக்கு அவ்வாறே உண்டாவதற்கும் இச்சங்கத்தின் நோக்கமாகும்.

முன்னேற்றங்களாவன?

1. அத்யாத்மம் (கடவுள் வழிபாடு அல்லது யோகம்.)

2. சமுதாயம். 3, கல்வி, 4, சன்மார்க்கம், 5, ராஜாங்கம் என்ற ஐந்தும் ராகத்துவேஷமில்லாமலும் ஜாதி பிரிவினையில்லாமலும் ஒற்றுமையுடன் முன்னேற்றம் அடைவதற்கு தேசங்களின் *நிலைமையைப் பார்த்து முன்னோர்களால் வரைந்துள்ள நூற்களை ஆராய்ச்சி செய்து யெழியவழிகளை கண்டுபிடித்து தானும் அனுஷ்டித்து பிறர்க்கும் சொல்லுவதில் சித்தமாய் இருக்கவேண்டும்.

---

* Note:—நிலவளம்,.நீர்வளம் முதலிய எல்லா செழிப்பும்பொருந்திய; பர்மா, சிலோன், இந்தியா முதலிய தேசங்களில் அனுஷ்டிக்க வேண்டும் ஆசாரங்கள் நீர்வளம் முதலிய செழிப்புக்குன்றிய, அரேப்பியா, பாலஸ்டின் சகாரா முதலிய தேசங்களில் அனுஷ்டிக்கவேண்டிய ஆசாரங்கள் இவ்விரு நாடுகளிலும் வேற்றுமைப்பட்ட ஆசாரங்களாய் இருக்கவேண்டும் என்று குறிப்பதாகும்.

## ஆராய்ச்சியும் உடன்பாடும்.

(1) ஒவ்வொரு க்ஷத்திரியரும் மேற்படி விஷயங்களுக்கு வேண்டிய ஞானங்கள் தற்காலம் தான் அனுஷ்டித்து வரும் மதத்தில் முன்னோர்களாகிய க்ஷத்திரியர்களால் வரைந்துள்ள நூற்களை முதல் ஸமாலோசனை செய்து ஜாதி வகுப்புப்பிரிவினை இல்லாமலும் முன்னுக்குப் பின் முரணில்லாமலும், ராகத்வேஷங்களைக் குறித்துச் சொன்னதல்லாமலும், தான் சுயமாகி ஓர் அர்த்தத்தைக் கற்பிக்காமலும் ஆராய்ச்சி செய்து மக்கள் முன்னேற்றத்திற்குத் தடையில்லாமலும், பாஷா வேஷ விசாரத்தினால் ஒற்றுமைப்படுத்தும் விஷயங்களை யெல்லோருக்கும் பொது உரிமையாக ஒத்துக்கொள்ளுதலும் இதற்கிடையூரான விஷயங்களை மறுப்பதிலும் தயாராய் இருக்கவேண்டும்

## க்ஷத்திரிய தர்மத் தலைவர்கள்.

(2) தேச மக்களுக்கும் தனக்கும் வேண்டிய ஆராய்ச்சி செய்யும் மக்கள் முதல் முதல் சுவாமிதயானந்த சரஸ்வதியாரால் எழுதப்பட்ட ஸத்யார்த்தப் பிரகாசம், ருக்வேத பாஷ்ய பூமிகையையும், வாசித்த பின்னர் மனுநீதி தர்மம் ஞானசூரியன் மதவிசாரணை முதலியதை வாசித்து முடிக்குதல் வேண்டும். பின் மக்கள் தர்மசிந்தாமணி என்னும் நூலையும் வாசித்து க்ஷத்திரிய தர்மம் ஒத்துக்கொள்ளுதல் நலனுகும். (மானவ சிந்தாமணி—அச்சில்.)

(3) க்ஷத்திரிய தர்மத் தலைவர்கள்:—ஸ்ரீ சிவன், ஸ்ரீ விசுவாமித்திரன் ஸ்ரீ ராமன் ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்ரீ புத்ததேவர் ஸ்ரீ மகா வீர சுவாமிகள் ஸ்ரீ கிறிஸ்துதேவர் ஸ்ரீ முகம்மது முனிவர் முதலிய க்ஷத்திரிய நாதாக்கள் ஆவார். அத்தியாத்மதர்மத்திற்கு தலைவர்களாக ஒத்துக்கொள்ளப்படும்.

## ஆலயவழிபாடு.

(4) ஆலயங்களில் வைத்து வணங்கிவரும் க்ஷத்திரிய தலைவர்களும் தலைவிகளுடையவும் ஆலயங்களில் அத்தனையும் க்ஷத்திரிய சங்கத்திற் சேர்ந்த ஒவ்வொருவனுக்கும் பொது உரிமையுள்ளது.

(5) இன்றைக்கு ஆசியா கண்டத்தில் வசித்துவரும் மக்கள் அதிகபக்ஷம் அனுஷ்டிக்கும் தர்மம் நாவலன் தேசத்தில் க்ஷத்திரிய மேன்மக்களால் தோன்றியதாலும் அம்மதத்திற்குரிய (ஜைன, புத்த, வைதீக) நூல்கள் ஐம்பத்தோரக்ஷரத்தொகுதியாகிய சமஸ்கிருத பாஷையில் இருப்பதாலும், தமிழ்நாட்டை சுற்றியுள்ள சிலோன், மலையாளம், தெலுங்கு, பர்மா நாடுகளிலும் நாவலன் தீவுமுற்றிலும் இதே ஐம்பத்தொன்று அக்ஷரங்கள் தொகுத்து பாஷ்யாக்கி செய்ததாலும், மேலும்இன்றைக்கு எல்லா தமிழர்களும் ஸமஸ்கிருதபாஷையில் யெழுதப்பட்ட எல்லா வைதீகநூற்களும் இவர்களுடைய மதநூற்கள் (தேவாரம், திருவாசகம், நாலாயிரபிரபந்தங்கள்) ஒத்துக்கொண்டிருப்பதாலும் தற்காலம் நாவலன் தீவில் பேசிவரும் தமிழொழிய எல்லா பாஷைகளுக்கும் தாயாக இருப்பதாலும், யிதே (சமஸ்கிருத பாஷையை) படிப்பதில் இச்சங்கம் ஆக்ஷேபனை செய்வதில் தயாரில்லை.

(6) இச்சங்கத்தில் சேரும் ஒவ்வொரு புருஷனும் ஸ்திரீயும் தனக்கு எவ்வளவு அதிகமான ஆஸ்தியிருந்தபோதிலும் ஸ்திரீகள் 16-வயது புருஷர்கள் 24-வயதிற்கு மேல் சரீர சௌக்கியமுள்ள காலங்களில் தனது ஜீவனார்த்தமாக 6-மணி நேரத்தில் குறையாமலும் 8-மணி நேரத்தில் அதிகப்படாமலும் யாதாகிலும் ஒருவேலை அபிமானம் விட்டு செய்தே ஜீவித்தல் வேண்டும். (இது தனக்கும் தன் சமுதாயத்துள்ள மக்களுக்கும் நன்மை பயக்குவதற்கும் நித்திய சுகத்திற்கும் காரணமாகவே இருக்கும்.)

(7) இச்சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் ப்ராஹ்மணர் துலுக்கர், கிறிஸ்துவர், முதலாகிய மதஸ்தாது மதத்தைப்பற்றி பிறருக்குத் துன்பம் செய்யாதிருக்கும் கொள்கைகளை கண்டிக்கவோ அது காரணமாய் கலகம் உண்டாகும் எவ்வித சைகைகளும் செய்யக் கூடாது. ஆனால் அவர்களுக்கு தேசகால வர்த்தமானத்திற்கேற்ற நல்லொழுக்கங்களை போதிப்பதில் எவ்விதமான ஆக்ஷேபனைகளும் கிடையாது.

(8) இச்சங்கத்தின் அங்கத்தினராகிய ஒவ்வொருவரும் பரோபகாரம் செய்வதற்கே பிறந்தவர்கள் என்று தீர்மானிக்கவேண்டும்,

மேலும் வகுப்பு ஜாதி ஏழை பணக்காரன் என்று எண்ணு மலும் வியாதி தரித்திரம் சத்துருக்களால் பீடை, ஸ்மசான யாத் திரை, ராஜ துன்பம் இவ்வித காலங்களில் ஏழைகளுக்கு அழைக்கா மலும் பொருளாலும் சரீரத்தாலும், பொருளுடையோர்கள் அழைத் தால் ப்ரதிபலன் கருதாமல் சரீரத்தாலும் உதவியாய் இருத்தல் வேண்டும். (இதில் ராஜாக்களால் வரும் துன்பத்தில் விசாரித்துச் செய்யவும்.)

(9) மக்கள் மதத்திற்காக கோலம் கொள்ளாமலும் மதத்தை மக்களுடைய முன்னேற்றமாகிய இகபர சுகவாழ்விற்கும் பிறருக்கு துன்பம் வாராவண்ணம் எவ்வாறிருந்தால் நன்மை பயக்குமோ அவ் வாறு செய்துக்கொள்ளுக. ஆனால் எல்லோருடைய மேன்மையிலேயே தனது மேன்மையென்று கருதி ஒழுகவேண்டும்.

10. அத்தியாத்மஞானத்தவமே யெல்லாவிதமான நற்செய் கைக்கும் நற்குணமெய்யறிவுக்கும் மூலகாரணம் ஆதலால் அத்யாத்ம குரு அவர் மூப்பற்றவர், யெல்லா சுகசக்தியும் வாய்ந்தவர் மிகதயாளு பிறப்பும் இறப்பும் இல்லாதவர் மாறுத லற்றவர். ஆதியந்தமில்லாதவர் எல்லா நன்மைக்கும் ஆதாரமாய் இருப்பவர், யாவர் தன்னை வஞ்சனையில்லாத மனதுடன் ஸர்வசிவ சுகத்திற்காக வணங்கிறார்களோ அவரை துக்கத்திலிருந்து ஆள்பவர். எல்லாவற்றையும் அறிபவர். மூப்பற்றவர், அழிவில்லாதவர், பயமற்ற வர். எக்காலத்தும் இருப்பவர். பரிசுத்தர். நாம் அவரை ப்ரேமத் தோடு அவரவர்களின் நன்மையின்பொருட்டு மனதில் வணங்கத்தகுந் தது. இக்கடவுள் ஸ்ருஷ்டிகர்த்தாவல்லர் (கல்லில் செடி கொடிகளில் பாவனைபண்ணி வணங்கலாகாது.)

11. இச்சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் எக்காரணம் பொருட்டாவது (1) கொலை செய்தல், புலால் உண்ணல், (2) பொய் சொல்லுதல், வீண்வார்த்தை பேசுதல், (3) விபசரித்தல், விபசார விஷயங்கள் பேசுதல் (4) திருடுதல் திருட்டுப்பொருளைப் பெற்றுக் கொள்ளுதல் (5) கள்ளுண்ணல், எவ்வித மாதகத் திரவ்யங்களும் புகையிலை, பொடி பீடி, சிகரேட், கஞ்சா முதலியவைகளும்,

அருந்தலாகாது. அருந்தினால் ஆத்மபுத்தியும் ஜீவனில் கருணையும் உண்டாகாது. தெய்வநாட்டை அணுகமுடியாது. ஆதலால் இவைகளை முயற்சியோடு விடல் வேண்டும்.

12. இச்சங்கத்தில் உலகிலுள்ள எல்லா மக்களும் இதில் விளக்கிய கொள்கைகளை ஒத்துக்கொண்டு சேரலாம். சேர்ந்த பின்னர் விவாகம் போஜனம் ஆலயப்ரவேசம் படிப்புமுதலியதில் ஸம உரிமைகள் உண்டு.

13. எக்காரணம் பொருட்டாவதும் கொலை செய்தல், பொய் சொல்லுதல், விபசரித்தல், திருடுதல், கள்ளுண்ணல், கெட்டவார்த்தைகளை பேசுதல், சூதாடுதல், முதலிய பல தீங்குகளும் மக்களுக்கு கெடுதிகளை விளைவிப்பதால், அவைகளை மிக முயற்சியோடு அறவே நீக்குதலும் யாராகினும் இச்செய்கைகளை செய்வோர்களை பார்த்து கருணையோடு தாழ்ந்து வணங்கி யின்சொல்லால், இச்செய்கைகள் காலனுக்குரியதும், கத்தி முதலியதால் கொலை நிகழ்த்துவதும் ஆகிய நீசகர்மங்களை விட்டுவிட மூன்றுதடவை கேட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

14. இச்சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் எந்த சமயத்திலாவது எவ்விடத்திலாவது எந்த ஜாதி குழந்தைகளை, ஸ்திரீகளை, கிழவன், கிழவியை, பசுக்களை யாராகிலும் அனியாயமாய் துன்புறுத்துவதைக் கண்டாலும், கேட்டாலும், அக்கணமே அவிடம் சென்று அவர்களை துன்பத்தில் நின்று நிவிர்த்தித்தல் வேண்டும். இச்சகாயத்தில் தனதுப்ராணனையும் தத்தம் பண்ண நேரிட்டாலும் அதுவே நமது சுக வாழ்வென யெண்ணுதல் வேண்டும்.

15. இச்சங்கத்தில் சேரும் ஒவ்வொரு க்ரஹஸ்தரும் இந்த க்ஷத்திரிய தர்மப்ரவருத்தகஞக இருப்பதோடு, முக்கிய தர்மப்ரசாரத்திற்கு யெதிகளையே ஏற்பாடு செய்தல்வேண்டும் அவர்களுககு யெல்லாவிதமான உதவியையும் செய்ய தயாராய் இருக்கவேண்டும்.

தரிசனம். (பிலாஸபி.)

## யெதி தர்மம் or யோகி தர்மம்.

1. இச்சங்கத்தில் சேரும் யோகிகள் அல்லது யெதிகள் எல்லா உயிருக்கும் எல்லா உலகத்திலும் ஒரே மதம். ஒரேபாஷை

பாஷையில் ஒரே விஷயம், ஒரே தெய்வம் ஒரே சக்தி, ஒரே எண்ணம், ஒரே ஜீவப்பொருள், ஆனால் தேசப் பேதத்தினாலும் அறிவின்மையாலும், பர்யாய வாக்குகளாக பாஷையும் பொருளும் மாற்றமுள்ளதென்று ஒத்துக் கொள்ளுதல் வேண்டும்.

2. இச்சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொரு யெதிகளும, ஜீவ ஹிம்சை, புலால் முதலியவை புசித்தல் கூடாது.

3. எவ்விதத்திலும் (ப்ரஹ்மசர்ய) ஆத்ம வீரியத்தை காப்பாற்றுதல் வேண்டும்.

4. எவ்விதத்திலும் பொய் பேசாமலும் திருடாமலும் காப்பாற்றுதல்.

5. எக்காரணம் பற்றியும் கள், கஞ்சா, புகையிலை சங்கீதங்கள் சம்பந்தமான மாதகத்திரவியங்கள் உபயோகிக்காதிருத்தல்.

6. காலை ஆறுமணியிலிருந்து பகல் பன்னிரண்டு மணிக்குள் ஒருவேளை புசித்தல். அவ்வன்னமும் ஒருநாள் பழக்கமுள்ளதும் எச்சல் கலந்ததும் மாதகத்ரவ்யங்கள், மாம்ஸம் முதலியவை கலந்தும் புசிக்கக்கூடாது.

7. தனது சரீராத்ம சுகத்திற்காக தினம் காலையில் பல் வாய் சுத்தி செய்து ஜலத்தில் விதியோடு ஸ்நானம் பண்ணி 3 மணிநேரம் குறையாமல் விசுவாமித்திர காயத்திரியை விதிப்படி ஜபித்தல் வேண்டும். இவ்வாறே சாயங்காலத்திலும் செய்யுதல் வேண்டும்.

8. தனக்கு ஜீவனார்த்தம் பிறரிடத்தில் இருந்து உண்ண உடுக்க படிக்க, சௌகர்யம் வேண்டுமானால் தனக்குத் தெரிந்த அறிவை வஞ்சனையில்லாமல் பிறர்க்கு சொல்லிகொடுத்தே தீரவேண்டும். எவ்விதமான படிப்பும் அறிவும் யில்லாவிடினும் அதை தான் கற்றே தீரவேண்டும்.

9. ரதிசல்லாப விலாசங்களும் யுத்தசன்னக விஷயங்களும் மாரணோச்சாடனப்ரயோகங்களும், ரசாயன கர்மங்களைப்பற்றிச் சொல்லும் நூற்கள் பழகினாலும் அதுகளை பிறருக்கு உபயோகிக்கக்கூடாது. தானும் அவ்வழி நடத்தல் கூடாது.

10. ஒவ்வொரெதியும் கழுத்திலிருந்து காலாணிவரைக்கும் கந்தத்துணியாலாவது மறைத்திருக்கவேண்டும். அத்துணியும் காவி யால் நனைக்கப்பட்டதாகவேண்டும். தனக்கென்று விசேஷாடம்ப ரங்களும் திருடர்களைப் பயப்படக்கூடிய சாமான்கள் யாதும் கையில் வைத்திருக்கக் கூடாது. இராஜாங்க விஷயங்களிலும் பிரவேசித்தல் கூடாது. துணி இல்லாமலும் கௌபீணதாரியாகவும் நடத்தல் கூடாது.

11. யாதொரெதியும் ஸாதனை சமாதி பழகும் காலங்களிலும், தர்மோபதேசம் செய்யும் காலங்களிலும் எவ்விதமானக்ரஹஸ்த சிந்தனையும்செய்யக்கூடாது. யெதி தர்மரக்ஷணை முடியாவிடில் உடன் க்ரஹஸ்தனுகவே செல்லுதல் முறை.

12. யாதொரெதியாவது விபூதி முதலியவை கொடுத்தல் சித்தி விளையாடுதல், தங்கம் முதலிய ரசாயனம் செய்தல், வைத்தி யங்கள் செய்தல், மாந்திரீகம் செய்தல், பிள்ளை வரம் கொடுத்தல் புலால், கள், பீடி, சிகரெட், கஞ்சா, முதலிய மாதகத்திரவ்யங் கள் புசித்தல் பாட்டு பாடுதல், நடித்தல், முதலாகிய யெதிதர்மங் களுக்கு விரோதமான விஷயங்களை செய்கிறார்களோ அக்கணமே யிது யெதிதர்மமல்லவென்று க்ரஹஸ்தனும்கூட சொல்ல கடமை பட்டது ஆதலால் இவ்விஷயங்கள் ஓர் யெதி மற்றொரு முனிவ ருக்கு கூடாவொழுக்கம யென்று விளக்குதல் வேண்டும்.

13. ஒவ்வொரு யெதிகளும் இன்றெக்கு க்ரஹஸ்தராகிய ப்ராஹ்மண தர்ம மதத்தில் வாழ்ந்து வருவதென்றும் இங்கு க்ர ஹஸ்த ப்ராஹ்மணர்களும் சன்னிபாசிக்கும் யாதொரு சம்பந்த மில்லையென்றும், சன்னியாசி தர்மம், புத்த மதமும், ஜைனமத மும், அதாவது க்ஷத்திரியர்மதமென்று அறிந்துகொள்ளுதல்வேண்டும்

14. யெதிகளுக்கென்று குடிகளால் வகுத்த மடங்களும் ஆலயங்களும் அதைப்பற்றிய பொருள்களும் எல்லா யெதி சமு தாயத்திற்கும் உணவுக்கும், படிப்பதர்க்கும், வஸ்த்திரம் யிடவசதி இவைகளுக்கும் க்ரஹஸ்தர் அனுகூலிக்கவேண்டும் அப்பொருள் மொத்தத்தில் சில குறிப்பிட்ட மக்களால் கையடக்கி பின் வரும்

யெதிகளை ஜாதி கோட்பாடுகளைச் சொல்லி புறக்கணித்ததால் ஆலயங்களின் திண்ணையும் வீட்டுத் திண்ணையும் வழியில் சென்று பிச்சை யேற்று காலம் தள்ளுவதற்கும் இடமாயிற்று. இத் துயரத்தை உடன் இல்லாமல் செய்யவேண்டும்.

15. வைதீக மதத்திலுள்ள க்ஷத்திரிய தர்மம் யென்கிற எல்லா வஸ்துக்களும் ஞானங்களும் எல்லோருக்கும் அதிகார முறைப்படி கிடைக்கச் செய்வதே க்ஷத்திரிய தர்மத்தின் உள்கருத்து என்று ஒவ்வொரு யெதியும் அறிந்திருத்தல் வேண்டும்.

## யெதிகள் தொழில்

க்ஷத்திரிய (ராஜ ஸன்னியாசிகள்) துறவிகள் மக்களின் பொருட்டு செய்யவேண்டிய நல்லோபதேசங்கள யாதெனில் பொது மக்கள் யாவரையும் ஜாதி வேற்றுமை, ஈஸ்வர வேற்றுமை, முதலியவையும் வேறு முன்னேற்றத்தடைகளையும் அறவேநாசஞ்செய்து படிப்பில்லாமல் கெட்டுப்போன பறையன் பள்ளி முதலிய பண்டைக்காலத்த மேன்மக்களையும், படித்து வழிதெரியாமல் தடுமாறும் பண்டைக் காலத்த கீழ்மக்களாகிய, யிக்காலத்த மேல்மக்கள்யென்று நடித்துக் காட்டும் பார்ப்பனரையும் உலகியற்கேற்றவாறு நல்லொழுக்கத்திற்கும் ப்ரேமவாழ்க்கைக்கும் கொண்டு வருதல் கடமையாகும்.

## பெண்ணுருமை.

க்ஷத்திரிய அத்யாதம சங்கத்தில் சேரும் ஒவ்வொரு, பெண் மணிகளும், தனக்கு சரீராரோக்கியமுள்ள காலங்களில் 40-வயது வரைக்கும் விதவையாகயிருக்கலாகாது. 40-வயதுக்குமேல் தனது வாழ்க்கைத்துணை தோழன் யிறந்து விட்டால் பின் விவாகமும் பண்ணலாகாது.

## கல்வி.

இச்சங்கத்தில் சேரும் ஒவ்வொரு பாலிகையும் தனது 16-வயது வரையிலும், தாய் தந்தைகள் அல்லது அரசன் கல்வி கற்பித்துக் கொடாவிடில் 16-வயதுக்குமேல் விவாகம் முடிந்தபின் தனது தாய் பாஷையாகினும் யெழுத வாசிக்கத் தெரிந்தபின் ஸந்தான உற்பத்தி உண்டாகுதல் வேண்டும்.

## தோழன் பெருமை.

இச் சங்கத்தில் சேரும் ஒவ்வொரு பாலிகையும் விவாகம் செய்யும் புருடனுக்கு அரும்தவமும் பெரும் கல்வியும் நல்லொழுக்க மும் நிறைந்த குணமுள்ளவனைத்தான் வாழ்க்கைக்குள்ள தோழனுக் குதல் வேண்டும். (b) (யிவனுக்கு தன்னை காப்பாற்றும் பொருட்டு ஓர் கைத்தொழிலும் அறிந்திருத்தல் வேண்டும்.)

## பெண்மணிகள் வெறுக்கத்தக்கவை.

இச்சங்கத்தில் சேரும் பெண்மணிகள் காலையில் தூங்குகிற வனையும் கள், சஞ்சா முதலிய பீடி சிகரட்டு புசிப்பவனையும் சூதாடுப வனையும் பையாஸ்கோப், டிராமாவில் பணத்தை சிலவு செய்பவனை யும் மாற்றான் மனைவியை தாசியை சேருபவனையும் பொய், திருடு, கொலை செய்பவனையும் மாற்றான்வார்த்தை கேட்டு அடிப்பவனையும் தன்னை யெப்போதும் சந்தேகிப்பவனையும், மறுபுருடனை சேர தூண்டுபவனையும் மணம் முடித்தபின்னராயினும் இத்துற்குணங்களை அறிந்தபின் விலக்குதல் வேண்டும்.

## புருடர்கள் வெறுக்கத்தக்க பெண்.

இச்சங்கத்தில் சேரும் புருடர்கள் யெப்போதும் அழுகிறவளை யும் என்னை இன்னான் காமிக்கிறான் யென்று கலகம் பண்ணி சத்து ருக்களை உண்டுபண்ணுகிறவளையும் புருடன் யிருக்கும்போது வேறொ ருவனை நேசிப்பவளையும் பிறர் மெச்ச சிங்காரம்செய்து நடிப்பவளையும் படிக்கச்சொன்னால் மறுக்கிறவளையும் யினம் ஜனங்களையும் பந்துக் களையும் குற்றம்சொல்லி கலகம் உண்டுபண்ணுகிறவளையும் ஆசை யோடு அதிக பொருளை கேட்பவளையும் விருந்தினரை உபசரிக்காத வளையும், பலதடவையும் பொறுத்தும் புத்திசொல்லியும் கேளாவிடில் அடிக்காமலும் கலகம் செய்யாமலும் தாய் வீட்டிற்கனுப்பத்தக்கவை.

## அறிக்கை.

தமிழைவளர்க்கமுயலும் தமிழுலகப்பெரியார்களுக்கு ஓர் சிறு அறிக்கை:— நமது நாடாகிய நாவலன்தீவின் பகுதியாகிய சென்னை ராஜ்ய ஸ்தாபனம். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலயாளம், என்னும் நான்கு தேசங்கள் அடங்கியிருப்பதாகவும் இதில் முற்றும் ஜனத்தொகை (ஜனமசோதா கணக்குப்படிக்கு) 4½க்கோடிமக்கள்

வசித்துவருவதாகவும் அறிகிறோம். இத்தொகையில் நின்று, தெலுங்கு, கன்னடம், மலயாளம், முதலிய தேசமக்களை நீக்கி தமிழ் நாட்டில்மட்டும் வசித்துவரும் ஜனங்கள் சுமார் $1\frac{1}{2}$க்கோடி மக்கள் என்று கேள்விப்படுகிறோம். இத்தொகையில் தமிழுலகில் தமிழ் மக்களோடுகூடி பரவிக்கிடக்கும் தெலுங்கர் (30) முப்பது லெக்ஷம்; துலுக்கர், கிருஸ்துவர்கள், ப்ராஹ்மணர்கள், ஸௌராஷ்டிரர்கள் முதலியவர்கள் தொகைகளும் நீக்கி அன்னியநாட்டில் குடியேறின தமிழர்களையும் சேர்த்து கணக்கிடுமாகில் 1-கோடி சுத்ததமிழர்களும் கூட தேரமாட்டார்கள். (தெலுங்கர்கள் தன்வீட்டில் தெலுங்கே பேசுவதாலும், ஒருநாள் அல்லது சிலவருஷம் சென்றபின்னாவது தெலுங்கேகற்றுக்கொள்ள முயலுவார்கள்; இப்படியே ப்ராஹ்மணன் ஸம்ஸ்கிருதத்தையும் கிருஸ்துவர்கள் (இங்கிலீஷ்) பாஷையையும் துலுக்கர் "அரபி" "அல்லது உருது" இதுகளைக்கற்று தேற்சியடைய விரும்புவர். இத்தொகையில் எவரேனும் தமிழ்வளர்ச்சிக்கு உதவுமென்றெண்ண திறமில்லை. ஏனெனில் அவரவர்கள் உரிமையுடன் கொண்டாடும் மதநூற்களையெழுதிய பாஷைகளை கற்கவே எண்ணம் கொள்வார்கள்.) இது நிற்க சுமார் இவ்வொருகோடி தமிழ் மக்களில் முக்கியமாக இரண்டுவிதமதங்களில் கட்டுப்பட்டவர்களாக காணப்படுகிறோம். இதில் ஒன்று சைவம், மற்றொன்று வைணவம் என்ற பெயரால் அறியக்கிடக்கிறது.

இவரில் ஒருவகுப்பினர் தேவாரம் திருவாசகத்தை கடவுளைத் தேடும் தமிழ்வேதமாகக்கொண்டவர்கள். மற்றொருவகுப்பினர், நாலாயிர ப்ரபந்தத்தை கடவுள்தேடும் பெரியவேதமாகக்கொண்டவர்கள் இதில் தேவாரம் திருவாசகமும் அதைத்தொடர்ந்த "பன்னிரண்டு திருமறைகளும் பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களும்" இவைகளத்தனையும்; வைதிக ஆர்யபார்பனர்களது வேதம், ஆகமம், புராணம், ஸ்மிருதிகளடங்கிய, எல்லா நூற்களுக்கும் அதன் எல்லா கொள்கைகளுக்கும் தலைசாய்த்து அடிமைப்பட்டுவாழும் ஓர் புத்தகத் தொகுதிகளாகும். அப்படியே நாலாயிர ப்ரபந்தமும் என்று அறிக. சுருக்கிச் சொல்வதானால் ஸம்ஸ்கிருதபாஷையிலுள்ள வைதிக ப்ராஹ்மணக் கொள்கைகளை தமிழ்பாஷையினுடையநடுவில் "தேவாரம், நாலாயிர ப்ரபந்தமாக" அமர்ந்து, அதுவழியாக தமிழர்களுடைய ஹிருதய

கமலத்தில் புகுந்து, ஸம்ஸ்கிருதத்திற்கு தமிழேயும், ப்ராஹ்மணர் களுக்கு, தமிழ்மக்களேயும் அடிமைப்படுத்திவிட்டார்களென்று பொருளாகிறது. இத்தோடே நின்றுவிடவில்லே. இவ்வாறே வடநாட்டில் வசிக்கும் ஆர்யமக்களும் தென்நாட்டு தமிழர்களது பட்டணங்களின் நடுவில் தினம் ப்ரதியோராளமாய்வந்து வர்த்தகத்தினுல் பணப்பெருகச்செய்து குடிகொள்ளுகிருர்கள். திருஷ்டாந்தமாக சென்னேயில் ஸவக்கார்பேட்டை, மதுரையில் ஸௌராஷ்ட்ரப்ராஹ்மணர்களும் இவ்வாறே மலபார் கொச்சி டவுணில் குஜராத்தி வியாபாரிகளின் குடும்பம் மட்டும் 5000, ஐயாயிரத்திலதிகம் வசித்துவருகிருர்களாம்.

இதுபோலவே மதராஸ்டவுணில்மட்டும் 7000 (ஏழாயிரத்திலதிகம்) வடதேசசமணவியாபாரிகள் குடும்பம் வசித்துவருகிருர்களாம். அப்படியானுல் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு குடியேறும் வேறு ஹிந்துகளும், முஸ்லீம்களின் கணக்குசள் எவ்வளவு அதிகமாய் இருக்குமென்று யூகித்தறியுங்கள். இவ்வளவுதானு,மற்ருெருவிஷயமுங் கேளுங்கள். சென்ற சிறிதுகாலமாக "ஹிந்திப்ரசாரிணி ஸபா" ஹிந்திபாஷையை வளர்த்தும் சங்கம், ஆர்யசமாஜம் இவ்விருசங்கங்களும் மதராஸ் பிரஸிடென்சியில்வந்து சென்ற சில வருஷங்களுக்குள் எவ்வளவு ஆயிரக்கணக்காகிய மக்களே ஹிந்திபடிக்கச் செய்திருக்கிருர்கள், என்றும், ஆர்யசமாஜத்தில் சேர்த்ததென்றும் தெரியுமா? எத்தனேயோ ஆயிரம், இவ்வாறு வடநாட்டார் தென்னுடாகிய தமிழ் நாட்டில் உற்சாகத்தோடு வேலேசெய்துவருகிருர்கள். என்ன தென்னுட்டு பண்டைக்குடிமக்கள் தங்களுடைய தமிழ்வளர்ச்சியும் வியாபாரமும் வடநாட்டை நோக்கிச்சென்றதெவ்வளவு என்று கணக்கிடுமாகில் எவ்வளவு கடைகளும் எவ்வளவு தமிழ்கற்றவர்களேயும் பார்க்கலாம் என்ருல் சுத்த சூன்யம்யென்று சொல்லலாமா? அது தான் தமிழ்வளர்ச்சியாகுமோயென்று சந்தேகிக்கவேண்டியதாகிறது; ஆனுல் இவ்வமயம் நமது தமிழ்மக்கள் என்னதான் செய்கிருர்கள் என்று கவனிப்பதானுல் சன்னியாசி பண்டாரங்கள் எங்கேயிருக்கிருர்கள்.

இவர்களே ஊரைவிட்டு விரட்டுவதற்கு என்னவழிதேடுவோம், அப்பண்டாரத்தின் கையில் என்னதான் பொருள்வைத்திருக்கிறது அல்லது அவர்களே நாசம்பண்ணுவதற்கு எதுதான் தக்கஉபாயம்.

எங்கேயாகிலும் பிச்சையெடுத்து ஓர் புல்கூரைக்கட்டிடம் கட்டியிருந்தால் அதை எழுதிவாங்குவோம், அப்படிகொடாவிடில் நெருப்பை வைத்தோ வேறு எக்காரணம்செய்தோ நாசம்பண்ணிவிடுவோம் இப்படி துறவிகளை யுத்தம்பண்ணிநசுக்குவதில் கங்கணம்கட்டினவர்களாய் பலரைகாண்கிறோம். ஓர்கல்வியுடைய துறவி இந்நாட்டுக்குவந்தால் அவன்கையில் ஓர் புத்தகமிருப்பின் அதனை பலாத்காரமாயும் அறையில் அடைத்தும் பிடுங்கியகதையெனக்கு நன்றாய்தெரியும். இதோடு சிவன்கோவில் துறவிகளை கழுவேற்றும் திருவிழாவை கண்டுமகிழாமலிருப்போர் ஒரு சிலரேயாகும்

இச்சமயத்தில் இவர்களுடைய பாஷையும் சமயமும் வளர்ப்பதற்காக சிலர் இடையில் துணியை இறுக்கி கெட்டி ஹா ஹர சிவ சிவ என்று பலர் கேள்க தட தட வென்றடித்து கல்லில் தலையை முட்டிக்கொண்டு தனது மதத்தேயும் பாஷையேயும் குட்டி தெய்வங்களேயும் சிற்றறிவேயும் ஒன்று சேர்த்து ஒரு மூட்டையாக்கி கட்டி சிவோஹம் க்ருஷ்ணபரமாத்மாவென்று வயிறை தடவி தக்ஷிணாமூர்த்தியைப்போல் நடித்து சிலோன், பர்மா, மலாக்கா, சிங்கப்பூர், முதலிய நாட்டை நாடி ஜீவனத்திற்காக செல்லுகிறார்களே தவிர டெல்ஹி, ஆக்ரா, லாகூர், கராச்சி பாம்பே, கல்கட்டா, முதலிய வட நாட்டு நகரங்களை நோக்கிச் சென்று தமிழ் பாஷையேயும் தமிழுலகமும், தமிழ் வியாபாரமும் ஸ்தாபனம்செய்ய முடியவில்லை.

## அக்குறைகளுக்குள்ள காரணங்கள்.

வடநாட்டு மக்கள் (ஹிந்து ஆர்யர்கள்) ஆலயங்கள் கட்டி கும்பாபிஷேகத்திற்கும் உற்சவங்கட்கும் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிப்பதில் தயாரில்லை, ஆனால் அவர்கள் பொதுமக்களுடைய வித்தியாபிவிர்த்திக்கும் மற்று சௌகர்யங்களுக்கும் பணத்தை நன்கொடைசெய்கிறார்கள். வடநாட்டில் அநேக ஆயிரக்கணக்கான தர்ம சாலைகளும் பள்ளிக்கூடங்களும் பொதுமக்கள் நன்மைக்காக வைசியர்களும் வேறு பொருளாளிகளும் அமைத்துள்ளார்கள், துறவிகளை பொன்போல நினைத்து காப்பாற்றி வருகிறார்கள், ஹரித்வாரம் என்ற இடத்தில் மூன்று மைலுக்குள் 64 பாடசாலைகளும்

மடங்களும் ஸன்னியாசிக் (துறவிகள்) காக அமைத்திருக்கிறார்கள் பாடசாலைகள் இல்லாத மடங்கள் எவ்வளவோ! அங்ஙனமே துற விகட்கு இடவசதிக்காக அமைத்திருக்கிறார்கள். "ருஷீகேசம்" யென்ற விடத்தில் ஸன்னியாசிகளுக்கு உணவின் பொருட்டும் படிப்பின் விஷயத்திலும் காலாகம் பலிவால, பஞ்சாப் ஸத்திரம் இந்த இரண்டு ஸத்திரங்களிலும் சேர்ந்து வருடத்தில் (5000000) ஐம்பது லக்ஷம் ரூபாய்களுககு குறையாமல் சிலவு செய்வதாக கணக்கிட்டிருககிறார்கள். ஆதலால் வடநாட்டு ஜனங்கள் "நடமாடும் கோவில் அன்பர்க்கொன்றீயில் படமாடும் கோவில் பரமர்க்கங்காகும்" என்ற முதியோர் வாக்கை கைப்பற்றி ஒழுகிறார்கள், ஆதலால் அந்நாட்டு மககள் கடவுளர்களாகிய ஸனனியாசித்துறவிகளால் நன்மையும் பெறுகிறார்கள். சென்ற 50 வருடத்துக்குள் ஓர்ப்ராஹமணரல்லாத ஸன்னியாசியாகிய ஸ்வாமி *"தயானந்த ஸரஸ்வதி அவர்கள்" ஆர்ய சமாஜம் என்னும் ஓர் வைதிக மதப்ரசார சங்கம் ஸ்தாபனம் பண்ணி அதன் வழியாக இப்போது 5000 ஐந்தாயிரத்திலதிகம் வைதிக பாடசாலைகளும குரு குலங்களும் காலேஜுகளும் ஹைஸ்கூல்களும் நடைபெறுகின்றது. ஏன் அவ்வாறெனில் அந்த தேசத்தில் துறவிகளுக்கு மரியாதையும் வேண்டிய வசதிகளும் செய்வதற்கு கிரகஸ்தாகள் தயாராக இருக்கிறார்கள். செய்தும் வருகிறார்கள். ஆதலால் அந்தநாட்டு மக்கள் எல்லாவிதத்திலும நன்மையடைந்து தரித்திரக் கொடுமையில்லாமலும் சுயமரியாதையுடன் முன்னேற்றமடைகிறார்கள். இந்த நாடோ அதற்கு யெதிர்மறையாக சாதுக்களை அவமானம் பணணுவதும இவர்களுக்கு ஏதாகினும வசதி செய்பவர்களை கெடுத்தும மடமோ, புததகமோ பொருளோ தன் வசதிக்களவாகிலும ஓர் துறவி வைத்திருந்தால் அத் துறவியுடன் சேர்ந்து அவரை தன் மனைக்கு அழைத்துச சென்று அறையில் அடைத்தோ பலாத்காரமாக எழுதிவாங்கியோ கொள்ளை செய்தோ பெற்றுக் கொண்டு துரத்திவிட்ட பல கதைகள் எனக்குத்தெரியும். ஆகவே இத்

---

* அவர்கள் தகப்பன் ஓர் ப்ராஹ்மணரும் தாய் ஓர் சூத்திர ஸ்திரீயுமாகும் ஆதலால் இவரை பொதுப்ராஹ்மணர்கள் சூத்திரனென்று மறுத்தகாரணம் தான் சன்னியாசம் பெற்று வேதங்களை எல்லோரும படிக்கும்படி வசதி செய்தார்கள் என்று கேள்விப்படுகிறோம் அவர் முற்றிலும் பெரியோரேதான்.

தென்னாட்டு ஜனங்கள் வர வர மதியும் கெட்டு, பொருளும் கெட்டு, புகழும் கெட்டு நாடும் விட்டு கீழ்நாட்டை பார்த்தேக வேண்டிய காலம்வந்துவிட்டதே பரிதாபம் ஹோ! தென்னாட்டு தமிழ் மக்களே நீங்கள் உங்களுடைய தேசத்திற்கும் மதத்திற்கும் பாஷைக்கும் உங்களுக்கும் மேலான நன்மை தரத்தக்க எவ்வித கார்யங்களும் செய்துமுடிக்க ஒரு விதமாகிய வேலையும் அறிவோடு ஆரபபிக்கவில்லை என்று நான் அறிகிறேன்.

கிரஹஸ்தர்களாகியும் மக்கள் வகுப்பில் தாழ்ந்தும் கிடக்கிற உங்களை முன்போல உயர்த்திக்கொண்டு வரவேண்டிய கடவுளை இன்னும் நீங்கள் அறிந்துகொள்ளவில்லை, அவர்கள் இன்றைக்கு உடுகக்த் துணியில்லாமலும் உண்ண உணவில்லாமலும் வசிகக வசதி இல்லாமலும் படிகக பள்ளியில்லாமலும் கோவில் மதிலோரத்திலும் செடியின் கடையிலும் வீட்டு திண்ணை ஓரங்களிலும நின்று காலம் கழிககுகலும யிதோடு நில்லாமல் கண்ட மக்களுடைய திட்டும் அடியும் குத்தும பட்டு பரிதபித்து உயிர் வாழும் யிந்த ஏழை பரதேசிகள் என்று உணருஙகள். இவர்களுக்கு முன்போலவே வேண்டிய வசதிகளைச் செயது நன்ருக கல்வியூட்டி நாட்டில் நடமாட எக்காலத்தில வசதி வருமோ அக்காலமே தென்னாட்டுக்கு நற்காலம். இதைச்சொலல நான் கடமைப்பட்டுள்ளதால இவ்வாறு சொன்னேன். தேச நன்மை விரும்புவோர் அவ்விஷயத்திற்கு உடன் முன்வருக.

மனுநீதி மர்மம், ஞானசூரியன், மதவிசாரணை, சித்த ஸ்ரீஸ்வாமி தயானந்த ஸரஸ்வதியால எழுதப்பட்ட ஸத்தியார்த்தபரகாசமும நனருக துறவிகள் படிக்கவேண்டும்.

இவர்களுக்கு படிக்கத் தகுதியுள்ள இப்புத்தகங்களை இல்வாழ்வோர யிலவசமாக வாஙகி கொடுத்தலவேணடும்.

## பொது விதிகள்.

அன்புடைய ஹிந்துக்களே இவன் அன்போடு சொல்லும் இவ்வார்த்தைகளை கேழ்க்க செவிசாய்க்கும் பொருட்டு மிக வினயத்தோடு கேட்டுக்கொளளுகிறேன. தேச நனமைக்காக அடிபடடும் சிறை புகுந்தும், உயிர்விடும் மக்கள் தலைவர்கள் தயவு செய்து எங்க

ளேயும் தங்களுடைய (காங்கிரஸ் சங்கத்தில்) சேர்த்துக்கொள்ள பிரார்த்திக்கிறேன். ஆனல் எங்களை சேர்ப்பதற்கு முன் இச் சிறிய சந்தேகத்திற்கு சமாதானத்தை கொடுத்துதவவேண்டும்.

(1) அதாவது இந்தியா அல்லது, பாரதநாடு எக்காரணத்தினல் வைதிக ஹிந்துக்களுடைய கைவிட்டு அன்னிய அரசாங்கம் கைப்பற்றியது. அக்காரணம்இன்னும் பாக்கியிலிருக்கிறதா? இன்னும பாக்கியில் யிருப்பதானல் மறுபடியும உங்களை மற்றொருவனு மேலேய மாற்றப்படு மல்லவா? இதை இரண்டும் நன்கறியும், பொருட்டு ஞானசூரியன் மத விசாரணை மனுநீதி மர்மம் எனகிற நூலே எழுதிமுடித்தது இதுகளை நியாயவாயிலாக கண்டித்து எங்களை திருப்திசெய்கிறவரைக்கும்வைதிக் ஹிந்துக்கள் நடத்தும் அரசியல் முன்னேற்றத்தில் ஒத்துழைக்க அறிவுள்ள ப்ராஹ்மணரல்லாதார் முன்வரமாட்டார்கள அறிவில்லாமல் கட்டிலகப்பட்டு தலே முட்டிச்சாகும பார்ப்பனரல்லாதாருடைய அறிவீனத்திற்கு வருந்துகிறேன் இக்கழ்வியானது வைதிக அரசியல் முன்னேற்ற தலைவர்களே பலமாக கேடபதென்பதை நினைத்துக் கொள்ளுக. நியாய வாயிலாய் பதில் கொடுக்ாதவரைக்கும் இககக்ஷிகள (காங்கிரஸ் கக்ஷிகள்) அறிவில்லாமல் தோல்வியடைந்தவர்களென்று நாங்கள் கருதிக்கொண்டு யெங்கள் வேலையை முயற்சியோடு செய்துமுடிக்க துணிகிறேன.

(2) பார்ப்பனரல்லாதார்களுடைய முன்னேற்றத்தை நாடும் ஆங்கிலம்படித்த அப்ராஹ்மணத் தலைவர்கள் (ஞானசூரியன் மதவிசாரணை மனுநீதி மர்மம்) இப்புத்தகங்களை ஆஙகிலபாஷையில மொழிபேர்க்க முன்வரவேணடும் அவாகளுக்கு நான திருத்தி பிழை தீர்தது வைத்த புத்தகங்கள் கொடுக்கபபடும், மேலும இப்புத்தகங்கள் ஹிந்தி பாஷையிலும் உடன் எழுதி முடிக்குதல்வேண்டும்.

(3) நமது சங்கங்களை ஒவ்வொரு ஜில்லாக்களிலும் பட்டணங்களிலும், தாலூக்கா. கிராமங்களிலும் நிறுவுதல் முக்கிய அவசியமாகும் தர்மப்பிரசாரம் செய்வதற்கு முககியமாக சாதுக்களேயே படிப்பிதது நியமனம செய்வது நமது தர்மப்ரசார வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

(4) எதிகள் கற்கவேண்டியவைகள் தேச தேசாந்திரங்களில் க்ஷத்திரிய தர்மத்தை பரப்புவதற்கு (தேசகால வர்த்தமானத்திற் கேற்றவாறு) தனது சுய பாஷையும் தேசாந்திரத்திலுள்ள மற்றொரு பாஷையும் நன்றாக கற்றிருக்கவேண்டும் பின் வேதங்கள் (ருக் வேதம் யெஜுர்வேதம் சாமவேதம் அதர்வணம் குரான் பைபில் த்ருபிடகம் இவைகளை 3 வருஷகாலங்களுக்குள் ஆராய்ச்சி செய்து முடிக்குதல்வேண்டும். பின் ஆங்காங்கு சென்று மக்களுக்கு ஞானவிஞ் ஞானங்களை உபதேசித்து தர்மசங்கடத்தில் நின்று அப்புறப்படுத்தி சுதந்திரத்தை உண்டாக்குதலும் ஒருவர்க்கொருவர் நல்லுறவுடனும் ஸத்புத்தியுடனும் உலகில்வாழ்வதற்கு தூண்டுதலும் அவரவர்களுடைய பாஷையில் ஸன்மார்க்கமும் பொருள் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் வேண்டிய நூற்களையெழுதி வெளியிடுவதிலும் அன்னிய மதஸ்தன் புகுந்து வேற்றுமைப்பட்ட பாஷா வேஷ விசாரத்தினால் மக்களைப்பிரித்து ஆளாமலும் கவனிக்குதல் முக்கிய கடமையாகும் ஆதலால் இந்த நாட்டின் பேரிலும் மதத்தின் பேரிலும் அன்புள்ள பொருளாளிகள் ஆங்காங்கு மத ஆராய்ச்சிசாலைகள் திறந்து பல சன்னியாசிகளையும் படிக்கச்செய்து விடுவதே இந்நாட்டிற்கு செய்யவேண்டிய நன்கொடை இவ்வாறு செய்யத்தவறினால் நமது மதத்திற்கும் மக்களுக்கும் வரக்கூடிய யாது துன்பங்களுக்கும் சன்னியாசி சாதுக்கள் உத்திரவாதிகளாகி பழிசுமக்க தயாரில்லை.

## முடிவுரை.

அன்புடையீர், இவ்வுலகத்தில் பல நாடுகளில் பற்பல மனிதத் தொகுதிகள் முன்னேறி வந்திருக்கின்றது. அவைகள் அத்தனைக்கும் மூலகாரணம் அத்தியாத்ம சக்திப்பெருக்கனாலேயே அவ்வாறே பல மக்கள் சமுதாயங்களும் அழிந்திருக்கிற விஷயமும் கற்றறிந்த மனிதர்கள் நன்கறியலாம் அதன்காரணம் அத்யாத்ம சக்தி குறைவினாலேயும் முதலேயான விதித்தபடி நடவாததினாலேயும் மக்கள் எப்போதும் தனப்பெருக்கு வாழ்வுவந்தால் மதிமயங்குவதும் அதினால் பல துன்பங்களும் அனுபவித்து பணச்செருக்கால் வந்த வாழ்வைத் துறப்பதும் கண்கண்ட காக்ஷியாகும். அதுபோலவேயாம் மதங்களும் ஆத்மசக்தியை வளர்த்தி அத்தியாத்ம உலகத்தில் (கடவுளுலகத்தில்)

மனதைச் சேர்த்து மக்களை ஒன்றுபடுத்தும். அவ்வழி உதாரணமாக பௌத்தமதத்தில் அத்தியாதம சக்தியை வளர்ப்பதற்கு பலவித சாதனங்களும் விதித்திருக்கிறது அதற்கு குருவாகிய பகவான் புத்தபிரானும் கர்மமும் சித்தமாகவே காணப்படுகிறது யிவ்வாறே ஜைன மதத்திலும் வைதிகமதத்திலும் கிருஸ்து, இஸ்லாம்மதங்களிலும் ஆத்ம சுகவளர்ச்சிக்குள்ள பொருள்கள் தங்களிலும் குறையாமல் நிறைந்திருக்கிறது யெக்காலத்தில் யாதொரு மதத்தில் யிவ்விஷயம் குறவுபடுமோ அக்காலத்தில் அம்மதமும் சங்கமும் அதில் சேர்ந்த மக்களும் அழிவுபட சித்தமாயிருப்பதென்று பொருளாகும் அப்படியானல் ஒரு சங்கம் கடவுளையோ அல்லது கர்மபலத்தையோ குருவையோ ஒத்துக்கொள்ளாமல் மனசாந்தி ஆத்மசுகம் பெற்று வாழ்வதற்கு யாதாகினும் வழியிருந்தால் அதனை சொல்லுமாகில் நான்கேட்கவும் அவ்வாறு நடக்கவும் தயாருகயிருக்கிறேன்.

நாத்தீகம் பேசுவதற்கும் ஒருமுறையுண்டு அதற்கும் ஆஸ்தீகமத அறிவைக்காட்டிலும் அதிகம் அறிவுவேண்டும் உலகில் கடந்த ஞானியும் கடந்தமூடனும் இவ்விருவரும் நாஸ்திகம் பேசுவார்கள் நாத்திகம் யென்றால் யென்ன ஆஸ்திகமென்றால் யென்னவென்று சாஸ்திரீகமாய் சொல்லுவர்ஞானிகள். மூடர்கள் சொல்லும் நாஸ்திகம் யெவ்வாறிருக்குமென்று அவர்களையே கேட்டுக்கொள்ளுங்கள் இதைத்தொடர்ந்து பலதும் யெழுததோன்றுகிறது. மலயாள நாட்டில் பழமொழி ஒன்று கூறுவதுண்டு அது யாதெனில் "யெலியெக்கொல்ல யில்லம் சுட்டு யெலிசாடிப்பொயி யில்லம் வெந்தும் போயி" குடியைக்கெடுக்கும் எலியைக் கொல்வதற்கு கோபங்கொண்டு மனையின்பேரில் நெருப்பை கொளுத்தினார்களாம் நெருப்பைக்கண்ட எலிகள் ஓடி காட்டில் புகுந்தது. வீடு வெந்துபோய்விட்டது; அதுபோல் புத்திஹீனத்தோடு சங்கங்களை மக்கள் வளர்ச்சிக்கு ஸ்தாபனம் பண்ணுதிருக்க வேண்டும் இந்நாடு யெட்டுகோடி (8) மக்களிலதிகம் முஸ்லீம்களும் அவ்வாறே சிலகோடி கிருஸ்துமக்களும் சேர்ந்து வாழும் நாடு ஹிந்துக்களைமட்டும் மதம் வேண்டாம் யென்றுசொல்லி சங்கங்களேற்படுத்துவது இவர்களை கிருஸ்து முஸ்லீம்மக்களால் வேட்டையாட செய்வதென்று பொருளாகும். அல்லது ஹிந்து மதத்தை கண்டனம் எதிர்ப்ரசாரம் நடத்தியதுபோல் ஷடி மதத்தையும் கண்டனம்செய்து மக்களை

அறிவித்தல்வேண்டும். இத்தருணத்தில் பொறுத்திருக்கிறேன். இதன் வழியாக ஞானசூரியன் அச்சிட்டு விற்பவர்களுக்கு அறிவிப்பது யாதெனில் இனிமேல் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமானல் நான் பிழைதிருத்திவைத்த புத்தகத்தை யென்னிடம் கேட்டுவாங்கி வெளிப் படுத்தலாம். அல்லாமல் அச்சிட்டுக்கொள்வதானல் நமது உத்தே சத்தை கண்டிப்பதாகும்.

யெந்நாட்டு மக்களும் ராகத்வேஷமில்லாமல் ப்ரேமத்தோடும் கருணையோடும் தரித்திரக்கொடுமையும் தர்மசங்கடமும் நசித்து யெல் லோரும் மனக்களிப்புடன் வாழ்வதற்கு யெனது ஸன்மார்க ஸத்குரு வாகிய கதிர்காமஸ்வாமி அருள்புரிவாயாக.

சுபம். சுபம். சுபம்.

இப்படிக்கு,

எம். கே. கேசவனுண்ணி நாயார் யென்னும்
**ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதி.**

உ

பட்டிவீரன்பட்டி, சென்னை சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீமான் **W. P. A.** சௌந்திர பாண்டியன் அவர்களை நேரில் கண்டு பழகியது முதல்தடவையாகும். முன் பழக்கமில்லாத எனக்கு இக்காலத்தில் பொருளுதவாளிகளைப்போல்யாது கைமாறும் எதிர்பாராமல் இப்புத்தகம் அச்சியற்ற பணம் உதவியவர். இதோடு நில்லாமல் பொது மக்களுக்கு நல்லறிவு உண்டாக்கத் தக்க நூற்களை அச்சிடுவதிலும். கல்வி ஊட்டுவதிலும் தன்னாலாகிய உதவிகள் முற்றும் செய்துமுடிக்கிறேன் என்றும் வாக்களித்திருக்கிறார்கள்.

இப்படிக்கு,

எம். கே. கேசவனுண்ணி நாயர்,

யென்னும்,

**ஸ்வாமி சிவானந்தஸரஸ்வதி,**

யோகானந்தாச்ரமம்.

வண்ணாரப்பேட்டை மதராஸ்.